## மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**ந.க.எண்:270/ECC/DC5/ஒபக/2022, நாள்:23.03.2022**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2021–2022 – நிதி ஆண்டு – Project for Students overcoming substance Abuse (POSA) பயிற்சி நடத்துதல் மற்றும் அப்பயிற்சிக்கான செலவினத் தொகையினை – வட்டார வள மையங்களுக்கு விடுவித்தல் மற்றும் வழிக்காட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை: மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை அவர்களின் ந.க.எண்: 1295 / Equity ECC / ஒபக / 2021–2022, நாள்:18.03.2022

------

மேற்கண்ட பார்வைக் கடிதத்தில் மாநில திட்ட இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் பரவலாக பெருகிவரும் தீய பழக்கவழக்கங்களுக்கு மாணவர்கள் அடிமையாகாமல் தற்காத்துக் கொள்ளவும் அவ்வாறு அடிமையாகும் மாணவர்களை ஆசிரியர்கள் இனம்கண்டு அவர்களை நல்வழிபடுத்தவும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி தேவைப்படுகிறது. ஏனெனில் போதை பொருட்கள் பயன்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இப்பிரச்சனையானது சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் சவாலாகவும் மிகுந்த அச்சுறுத்தல் வாய்ந்ததாகவும் உள்ளது.

இது தொடர்பாக மாணவர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போதை பழக்கத்திலிருந்து மாணவர்கள் மீண்டும் வரவும் பள்ளி அளவிலான குழுவை அமைத்து கண்காணிக்க திட்ட ஒப்புதல் குழுவின் 2021–2022 ஆம் நிதியாண்டிற்கான Equtiy திட்டக்கூறின் கீழ், அனைத்து அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளிலும் Project for Students overcoming substance Abuse (POSA) பயிற்சி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தை MHRD பரிந்துரைந்தள்ளது. POSA பயிற்சியானது மாணவர்களுக்கு அளிக்க கீழ்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

- **மாவட்ட அளவிலான பயிற்சி:**

  மாநில பயிற்சி எடுத்துக் கொண்ட பயிற்சியாளர்களே மாவட்ட அளவில் ஒரு ஒன்றியத்திலிருந்து CRC HM-1, PG BIOLOGY-1, BT TEACHER-1, BRTE-1, TOTAL-4 ஆக 8 ஒன்றியங்களுக்கு 32 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **வட்டார வளமைய அளவிலான பயிற்சி:**

  இப்பயிற்சியை மாவட்ட அளவில் எடுத்துக் கொண்ட பயிற்சியாளர்களே வட்டார வளமைய அளவில் பயிற்சி அளிக்க வேண்டும். வட்டார அளவில் **28.03.2022** அன்று மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் Science BT-2, PG Biology-1, மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்–1, மொத்தம்–4 ஆசிரியர்கள். உயர்நிலை பள்ளியில் பணிபுரியும் BT ஆசிரியர்கள்–3, மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்–1 மொத்தம் 4 ஆசிரியர்கள் என ஒன்றியத்திலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இப்பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

- வட்டார வளமைய அளவில் பயிற்சி பெற்ற தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் இப்பயிற்சியை பள்ளியளவில் **29.03.2022** அன்று **9** ஆம் வகுப்பு முதல் **12** ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கும், SMC உறுப்பினர்களுக்கும் மற்றும் மாணவர் பாதுகாப்பு குழு உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளித்திட வேண்டும்.

இப்பயிற்சி முடிந்தபின் மாணவர்களுக்கு Slogan Writing, Poster Making போட்டிகள் பள்ளியளவில் நடத்தி மாணவர்களை தேர்ந்தெடுத்து வட்டார வள மையத்தில் வட்டார வளமைய அளவில் **30.03.2022** ...

நடைபெறும் போட்டிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களை அனுப்புதல் வேண்டும் இதைபோன்றே, வட்டார வளமையம்/மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தி அட்டவணையில் குறிப்பிட்டபடி மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கவும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதை பழக்கத்திற்கு அடிமையான மாணவர்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பள்ளிகளில் 6 உறுப்பினர்கள் கொண்ட மாணவர் பாதுகாப்பு குழுவினை (As per GO 83 Dated on 21st June-2021 Students Safeguarding Advisory Committee-SSAC) கட்டாயமாக அமைத்திட வேண்டும்.

இக்குழுவில் கீழ்கண்ட நபர்கள் இடம்பெற வேண்டும்

(i). தலைமை ஆசிரியர்
(ii). பெற்றோர் ஆசிரியர் கழகம்
(iii). RBSK மருத்துவர்கள்
(iv). பெண் பெற்றோர்
(v). EDC அல்லது BRTE
(vi). மாணவர்களை பாதுகாக்கும் ஆலோசனைக் குழு உறுப்பினர்

குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தி பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் முன்னேற்றத்திற்கான குழு உறுப்பினர்கள் பதிவேட்டை தவறாமல் பராமரித்திட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கண்காணிப்பு / வழிகாட்டு நெறிமுறைகள்:</u>**

- பள்ளிக் கல்வித் துறை மற்றும் சுகாதாரத் துறையின் ஆலோசகர்கள் மாணவர்களுக்கு (overcoming substance Abuse) போதை பழக்கத்திலிருந்து மீளவதற்கும் அவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்டெடுப்பதற்கும் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.
- இது சார்ந்த அனைத்து அறிக்கைகளும் புள்ளிவிவர தரவுகளும் நம்பிக்கையுடனும் இரகசியமாகவும் பராமரிக்கப்பட வேண்டும். சகமாணவர்கள் (peer leader) முதல் ஆசிரியர் வரை, ஆசிரியர் முதல் ஆலோசகர் வரை ஆலோசகர் முதல் மாவட்டக் கல்வி அலுவலர் வரை, மாவட்ட கல்வி அலுவலர் முதல் முதன்மைக் கல்வி அலுவலர் வரை.
- இது சார்ந்த பெற்றோருக்கு விழிப்புணர்வு கொடுக்கப்பட்டு அதனை தீவிரமாக கண்காணித்தல் வேண்டும்.
- பள்ளிக் குழு ஆண்டு முழுவதும் தொடர்ந்து கண்காணித்து விழிப்புணர்வு அளிக்க வேண்டும். போதை பழக்கத்திலிருந்து மாணவர்கள் மீள்வதற்கான ஆண்டு கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும்.
- மேற்கண்ட நோக்கத்திற்காக பள்ளிகளில் முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு அவை பள்ளிகளுக்கு வருகை தரும் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மேலும் இப்பியிற்சியானது மாநில / மாவட்ட / வட்டார வளமையம் மற்றும் பள்ளி அளவில் நடைபெற உள்ளதால் அட்டவணை 2 இல் உள்ளபடி மாவட்ட திட்ட அலுவலகத்தில் இருந்து வட்டார வளமையத்திற்கு நிதி விடுவிக்கப்படும். அவ்வாறு விடுவிக்கும் நிதியை அட்டவணை 2 – இல் உள்ளவாறு செலவினம் மேற்கொள்ள வேண்டும்.

வட்டார வளமைய அளவில் நடைபெறும் பயிற்சிக்கு கால அட்டவணை – 1 இல் உள்ள படி ஒரு பள்ளியிலிருந்து 4 நபர்கள் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கலந்துகொள்ளும் ஒரு பயற்சியாளருக்கு (ரூ.200/–) வீதம் வட்டார அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| Lunch | - | Rs. 100 |
| Refreshment Morning & Evening | - | Rs. 40 |
| Water & Other Miscellaneous | - | Rs. 35 |
| Scribling Pad and Pen | - | Rs. 25 |
| Total | - | Rs. 200 |

ஒரு பள்ளிக்கு மாணவர்களுக்கான பயிற்சி கட்டகம் ஒன்று – ரூ. 100/–

மாணவர்களுக்கான போட்டிகள் நிதிப்பயன்பாடு:

பள்ளி அளவில் Slogan Writing & Poster Making போட்டிகள் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வட்டார வளமைய அளவில் போட்டிகள் நடத்த வேண்டும். அவ்வாறு வட்டார வளமைய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஒரு போட்டிக்கு மூன்று பேர் வீதம் இரண்டு போட்டிக்கு 6 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வட்டார வள மையத்தில் வழங்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Block level Certificate | : | 6*100 = | 600 |
| Conducting competition | : | | 500 |
| Total | : | | 1100 |

வட்டார வளமைய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தவும். அவ்வாறு மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுகக ஒரு போட்டிக்கு மூன்று பேர் வீதம் இரண்டு போட்டிக்கு 6 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசு தொகை அட்டவணை:2 இல் படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பள்ளி வட்டார அளவில் மாணவர்களுக்கன போட்டிகள் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவில் மாவட்ட திட்ட அலுவலகம், காட்பாடியில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள சார்ந்த அலுவலகர்கள் தெரிவிக்கப்படுகிறது.

**பயிற்சி மற்றும் போட்டிகளுக்கான கால அட்டவணை : 1**

| S. No | Activity | Date | Level | Participants (Govt) | Venue |
|---|---|---|---|---|---|
| 1 | **POSA Training** | 25.03.2022 | **District Level** | CRC HM-1 PG Biology-1, BT Teacher-1, BRTE- 1 (Per block-4 participants) | DISTRICT PROJECT OFFICE, KATPADI |
| 2 | **POSA Training** | 28.03.2022 | **Block Level** | **Higher Sec School** HM- 1, PG-1, Science BTs-2. **High School** HM-1, BTs-3 (Per School- 4 participants) | SELECTED PLACE AT BLOCK |
| 3 | **POSA Training** | 29.03.2022 | **School Level** | All Students from IX to XII, SMC members & SSAC Members | CONCERN SCHOOL |
| 4 | **Slogan Writing & Poster making** | 29.03.2022 | **School Level** | IX to XII Students | CONCERN SCHOOL |
| 5 | **Slogan Writing & Poster making** | 30.03.2022 | **Block Level** | School level Selected Students- 3 per Competitions **(3*2=6)** | SELECTED PLACE AT BLOCK |
| 6 | **Slogan Writing & Poster making** | 31.03.2022 | **District Level** | Block level I, II, III Prize winners- 3 students per Competitions **(3*2=6)** | DISTRICT PROJECT OFFICE, KATPADI |

நிதி பயன்பாட்டு அட்டவணை : 2

| S. No | Name of the Block | Block level Training (A) | | | | | School level training (B) | Slogan writing and Poster making Competitions (C) | | A+B+C |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | No of High Schools (Govt) | No of Hr. Sec. Schools (Govt) | Total number of Schools | No of Teachers Per School- 4 | Rs. 800-/- per School Rs. 200-/- per Participant | this amount will be utilized by BRC level for Student module. No of copy 1 per School (Rs 100-/) | Block level Certificate 6*100 | Conducting Competition Rs 500-/- per block | G. Total |
| 1 | Anaicut | 17 | 10 | 27 | 108 | 21600 | 2700 | 600 | 500 | **25400** |
| 2 | Gudiyatham | 13 | 13 | 26 | 104 | 20800 | 2600 | 600 | 500 | **24500** |
| 3 | K V Kuppam | 7 | 10 | 17 | 68 | 13600 | 1700 | 600 | 500 | **16400** |
| 4 | Katpadi | 2 | 15 | 17 | 68 | 13600 | 1700 | 600 | 500 | **16400** |
| 5 | Kaniyambadi | 4 | 6 | 10 | 40 | 8000 | 1000 | 600 | 500 | **10100** |
| 6 | Pernambut | 11 | 5 | 16 | 64 | 12800 | 1600 | 600 | 500 | **15500** |
| 7 | Vellore Rural | 5 | 7 | 12 | 48 | 9600 | 1200 | 600 | 500 | **11900** |
| 8 | Vellore Urban | 4 | 5 | 9 | 36 | 7200 | 900 | 600 | 500 | **9200** |
| | Total | **63** | **71** | **134** | **536** | **107200** | **13400** | **4800** | **4000** | **129400** |

மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி 25.03.2022 அன்று மாவட்ட திட்ட அலுவலகம், காட்பாடியில் ஒரு ஒன்றியத்திற்கு ஏற்கனவே தெரிவித்துள்ள விவரப்படி 4 பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப சார்ந்த அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோவிட்–19 சார்ந்து அரசின் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடித்து, மேற்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வண்ணம் பயிற்சி மற்றும் மாணவர்களுக்கான போட்டிகள் மேற்கண்ட வகையில் நடத்திடவும், இப்பயிற்சி மற்றும் போட்டிக்கான செலவினத் தொகையை வழிக்காட்டு நெறிமுறைகளின்படி வட்டார வளமையங்களில் நடத்திட அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

பெறுநர்:

1. அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ).

நகல்:

1. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.